**தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271∴2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் 38 ஆவது பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) இந்த அறிக்கையின் இலக்கம் 1.6.3(அ) மற்றும் இலக்கம் 1.6.3(ஆ) பந்திகளின் உள்ளடக்கத்தின் அவதானிப்பு சம்பந்தமாக முன்னைய வருடத்திலே என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டிலே நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கருத்து தெரிவித்தல்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு இணங்காமை

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்கீட்டு சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டி இருப்பினும் அந்த தேவையிலிருந்து தவிர்க்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டுத் தொகை மற்றும் 2019 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டு தொகை என்பன ஒன்றுக்கொன்று சமனாக இருக்கவில்லை. | சுற்று நிருப மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | ஆரம்ப மதிப்பீட்டிற்கு பெறப்பட்ட மேலதிக ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | சுற்று நிருபத்தில் உள்ள மாதிரியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாததுடன் சரியான பெறுமதியும் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | சுற்று நிருபத்தின் பிரகாரம் நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

| | | |
|---|---|---|
| (இ) 2019 ஆம் ஆண்டின் பொருளாளரின் இறுதி கணக்கீட்டு அறிக்கை இணைப்பாக நிதிக் கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றுநிருபத்தின் 3.1 பந்தியின் பிரகாரம் பொருளாளரின் இறுதி கணக்கீட்டு அறிக்கை இணைப்பாக நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

## 1.6.2 நிதிச் செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றில் (ஏசீஏ-எம்) ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் செலவு, உதவிகள், நன்கொடைகள் மற்றும் மாற்றீடு செய்தல் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள் சரியாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் கூற்றில் செலவுகள் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

## 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிற்குள் மருதானை அரச தொழில்நுட்ப வித்தியாலயத்திற்கு பொறுப்பளிக்கப்பட்ட மற்றும் பதிவழிக்கப்பட்ட ஏனைய பொருட்களின் கிரயம் நிதி அல்லாத சொத்துக்களின் கூற்றில் பதிவழித்தலின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பதவழிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் நிதி அல்லாத சொத்துக்களின் கூற்றிலிருந்து அகற்றப்பட வேண்டும். | பதிவழிக்கப்பட்ட சொத்துக்கள் 2004 க்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அவை நிதி அல்லாத சொத்துக்களின் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களும் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் | நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களும் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் | 2004 க்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட இருப்பினும் பெறுமதியை சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்பட வேண்டுமெனினும் நிறுவனத்தினால் 2004 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை மாத்திரம் அங்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. | உள்ளடக்கப்பட வேண்டும். | பொருட்கள் சிலவற்றின் காரணமாக இந்த நிலைமை உருவாகியிருந்தது. |

### 1.6.4 கணக்காய்வு சான்றுகளின்மை

செயலாற்றல் கணிப்பீட்டிற்காக ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் பெறப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக 10 பிரதேச அலுவலகங்களிலிருந்தும் தகவல்கள் கேட்கப்பட்டிருந்தும் 04 பிரதேச அலுவலகத்திலிருந்து மாத்திரம் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில பதிவேடுகள் பேணப்பட்டிராதிருந்ததுடன் ஒரு சில பதிவேடுகள் முறையாகவும் மற்றும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சித்தலின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சேதம் தொடர்பான பதிவேடுகள் | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதம் தொடர்பான பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | சேதம் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| (ஆ) வாகனங்கள் நிரல்படுத்தும் பதிவேடுகள் | | |
| நிதிப்பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகனங்கள் நிரல்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை நிரல்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

| | | |
|---|---|---|
| (இ) விடுமுறைகள் தொடர்பான பதிவேடுகள்<br>------------------------------------------<br>நிறுவனக் கோவையின் xii பந்தியின் 1.7 இன் பிரகாரம் விடுமுறைகள் தொடர்பான பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | 190 பொது மாதிரிப் பத்திரத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகளை குறித்துக் கொள்வதற்காக விடுமுறை தொடர்பான பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

### 1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40.1 பந்தி மற்றும் SWISS செயற்திட்டத்திற்கு உரிய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் Swiss confederation represented by the federal department of forign affairs acting through the human security division இடையிலான உருவாக்கப்பட்ட ஒப்பந்தத்தில் xi ஆம் பிரிவு | ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வுப் பதவி வெற்றிடமாக காணப்படுவதனால் ஒப்பந்த தேவையின் பொருட்டு முழு நேர உள்ளக கணக்காய்வொன்றை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போனது | வெற்றிடமாக உள்ள பதவி நிரப்பப் படல் வேண்டும். | இந்தப் பதவியை நிரப்புவதற்கு தற்போது நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

(ஆ) 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரச்சட்டம்

---------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 15(8) பந்தி | பரிந்துரையொன்று அனுப்பப்பட்டு ஓர் அதிகாரசபை அல்லது ஒரு தனிநபர் அல்லது நபர்களினால் அந்த பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பதை மீறியுள்ள சந்தர்ப்பத்தில் அல்லது அந்த நபரினால் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டு, ஆணைக்குழுவின் பரிந்துரையை செயற்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ள நடவடிக்கைகள் ஆணைக்குழுவின் கருத்தின் அடிப்படையில் போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவினால் அந்த விடயங்கள் சம்பந்தமாக பரிபூரணமான அறிக்கையொன்று சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பரிபூரணமான அறிக்கை யொன்று சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | விடையளிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | 22(2) பிரிவு | ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள வேலைகளை நிறைவேற்றப்படுவதில் ஆணைக்குழுவிற்கு உதவுவதற்காக தேவையாக உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நியமிக்க முடியுமாக இருப்பினும் 2019 யூலை 31 ஆந் திகதியாகும் போது ஆணைக்குழுவின் பதவிகளின் 98 வெற்றிடங்கள் காணப்பட்டது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 30 ஆம் பிரிவு | ஆணைக்குழுவின் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களும், ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட அனைத்து விடயங்களினதும் பட்டியல்களும் அந்த விடயங்கள் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் உள்ளடக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வருடாந்த அறிக்கை பாராளு மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2016 மற்றும் 2017 வருடாந்த அறிக்கை தயாரிக்கப் பட்டிருப்பதுடன் 2018 ஆம் வருடத்தின் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனக் கோவை<br>---------------------------------- | | | |
| | 2 ஆவது பகுதியின் 13.2 ஆம் பிரிவு | அனைத்து ஆரம்ப விசாரணைகளும் தாமதமின்றி உரிய அனைத்து பகுதியினரும் எப்பொழுதும் பார்த்துக் கொள்ள வேண்டும். இருப்பினும், ஆணைக்குழுவின் முன்னால் பெண் செயலாளர் 2018 சனவரி 30 ஆந் திகதி கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தாலும், அவர் தொடர்பாக ஆரம்ப பரிசீலனைகள் 21 மாத காலமாக தாமதித்ததன் காரணமாக குறித்த காலத்திற்குள் அந்த உத்தியோகத்தருக்கு ரூபா 2,467,257 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஆரம்ப விசாரணைகளை தாமதமின்றி நிறைவு செய்வதற்கு உரிய அனைத்து பகுதியின் எப்பொழுதும் பார்த்துக் கொள்ள வேண்டும். | ஆரம்ப விசாரணைகளின் நடவடிக்கைகள் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிழந்து இருந்த காரணத்தினால் தாதமானதுடன் முதல் விசாரணை அதிகாரியினால் அறிக்கை வழங்காததன் காரணமாக மீண்டும் விசாரணை அதிகாரியொருவரை நியமிப்பதற்கு நேர்ந்ததனால் தாமதமாகியது. |

(ஈ) பொது நிதிச் சுற்றறிக்கை

---------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கை | ஆணைக்குழுவின் பணிகளாக அடையாளங் காணக்கூடிய வேலைகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றி பொதுமக்களுக்கு உயர் சேவையை பெற்றுக் கொடுப்பதற்காக ஆணைக்குழுவினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகளை அடையாளங் காணக்கூடிய செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| (ii) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கையின் 3.2.6 பந்தி | ஆணைக்குழுவினால் 2018 ஆம் ஆண்டின் வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கை குறித்த தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கை குறித்த தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| 3.2.5 பந்தி | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய இடம்பெற்ற பொருட்கள் கணக்கெடுப்பின்படி பதிவழிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட பொருட்கள் எதுவும் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>---------------------------------- | | | |
| | 2018 சனவரி 04 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்கமுடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை<br>---------------------------------- | | | |
| | 6.3.2, 6.3.3 மற்றும் 6.3.6 பந்தி | சர்வதேச மனித உரிமைகள் தினத்தை நினைவு கூர்வதற்காக தேவையன சேவைகளை வழங்குவதற்காக மோட்டார் சைக்கிள் ஒன்றை கொள்வனவு செய்தல், மற்றும் 05 போட்டோ பிரதி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு உரிய பெறுகைகள் வழிகாட்டியின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

**2. நிதி மீளாய்வு**

------------------------

**2.1 செலவின முகாமைத்துவம்**

--------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 13-1-1-2401 செலவு விடயத்தில் சேமிப்புக்கான காரணமாக பாதீட்டு சுற்றறிக்கையின் 04/2019 மற்றும் 05/2019 வரையும் காணப்பட்டாலும் ஆணைக்குழுவில் பயிற்சியளிப்பதற்காக பயிற்சித் திட்டமொன்று இல்லாமை இதற்கு காரணமாகியிருந்தது. | பயிற்சித் திட்டமொன்றை தயாரித்து செலவுகள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

## 2.2 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ கணக்கிற்கு மேலதிகமாக மேலும் 04 கணக்குகளில் ரூபா 771,073 ஆன மீதிகள் காணப்பட்டன. | 2007 செப்தெம்பர் 05 ஆந் திகதிய 05/2007 இலக்கமுடைய பொருளாளர் செயற்பாடு சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய வங்கி கணக்குகளை நடைமுறைப் படுத்துவதோடு அதற்கு சமமாக காணப்படுகின்ற பழைய வங்கிக் கணக்குகள் அனைத்தையும் மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

10 பிரதேச அலுவலகங்களில் மாதாந்த வேலைகள் திட்டமிடல் மற்றும் மாதாந்த முன்னேற்ற அறிக்கை என்பன செயலாளருக்கு சமர்ப்பித்தல் தொடர்பாக தகவல்களை சாராம்சமாக்கி கீழே தரப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச அலுவலகங்களினால் 2019 ஆம் ஆண்டில் எவ்வித மாதத்திலும் மாதாந்த வேலைகள் திட்டமிடலோ அல்லது திட்டமிடப்பட்ட முன்னேற்ற அறிக்கையோ செயலாளருக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. கல்முனை, மட்டக்களப்பு, கண்டி, பதுளை, மாத்தறை, அனுராதபுரம், மற்றும் வவுனியா ஆகிய அலுவலகங்களில் மாதாந்த வேலைகள் திட்டமிடல் செயலாளருக்கு முறையாக | பிரதேச அலுவலகங்களினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வேலைகளை உள்ளடக்கி மாதாந்த வேலைகள் திட்டமிடலொன்றை மற்றும் அந்த திட்டமிடலின் முன்னேற்ற அறிக்கையை ஆணைக்குழுவின் செயலாளருக்கு மாதாந்தம் கையளிக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

சமர்ப்பித்திருக்கவில்லை. மீளாய்வாண்டிற்காக கண்டி அலுவலகம் 09 மாதத்திற்கும், மட்டக்களப்பு அலுவலகம் 08 மாதத்திற்கும், மாத்தறை, பதுளை, மற்றும் வவுனியா ஆகிய அலுவலகங்கள் 02 மாதத்திற்கும் கல்முனை மற்றும் அம்பாறை அலுவலகங்கள் ஒரு மாதத்திற்கும் மாதாந்த வேலைகள் திட்டமிடலுக்கு உரிய முன்னேற்ற அறிக்கையை செயலாளருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 3.2 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆகிய வருட இறுதியில் விசாரணை நடவடிக்கைகள் முடிவடையாத கோவைகளின் எண்ணிக்கை முறையே 3576, 5710, 10201 மற்றும் 8812 ஆக காணப்பட்டது. இதற்காக முறைப்பாடுகள் விசாரணைகளை மேற்கொள்வதற்கான வேலைகளை வழங்கியிருக்கும் பரிசீலனைகள் மற்றும் விசாரணைப் பிரிவிற்கு உரிய சட்ட உத்தியோகத்தர்கள 22 இல் 21 உம் மனித உரிமைகள் பதவிகள் 47 முழுமையானதும் உள்ளடங்களாக வெற்றிடங்கள் நிலவுகின்ற பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட 118 இல் 98 உம் வெற்றிடமாக நிலவுகின்றமை பாதித்துள்ளது. முறைப்பாடுகளுக்கு | மிகத் தேவையான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்பி முறைப்பாடுகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுத்தல் துரிதப்படுத்தப்பட வேண்டும். | பதவியணியினரின் வெற்றிடங்கள் நிலவுவதற்கு பிரதான காரணம் ஆணைக்குழுவிற்காக ஆட்சேர்ப்பு முறைமை அங்கீகாரம் பெற்றிருக்காமை பாதித்துள்ளது இறுதியாக ஆட்சேர்ப்பு முறைமை 2018 மே 17 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும், ஊழியர்கள் உள்ளடக்கப்பட வேண்டியதற்கான இறுதி அறிவுரைகள் 2019 ஆகஸ்ட் மாதமாகும் வரை பெறப்பட்டிருக்க வில்லை என்பதுடன் ஆட்சேர்ப்பு முறைமையின் பிரகாரம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை செய்ய முடியாது போயுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | தீர்வைப் பெற்றுக் கொடுப்பதிலும் 2 வருடங்களிலிருந்து 6 வருடங்கள் வரையான காலம் சென்றுள்ளது. | | |
| (ஆ) | ஆணைக்குழுவின் நீண்ட வேலைகளின் பின்னர் தரப்படுகின்ற பரிந்துரையை நடைமுறைப்படுத்தாமல் காணப்பட்டதுடன், ஆணைக்குழுவினால் தரப்படுகின்ற பரிந்துரை ஏனைய நிறுவனங்களுக்குரிய சட்டங்கள், விதிகளுடன் பொருந்தாத சந்தர்ப்பங்கள் மற்றும் சமனான பரிசீலனை நடாத்துகின்ற நிறுவனங்களின் பரிந்துரையுடன் முரண்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. | பரிந்துரையை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பரிந்துரைகள் ஏனைய நிறுவனங்களுக்குரிய சட்டங்கள், விதிகளுடன் மற்றும் சமனான பரிசீலனை நடாத்துகின்ற நிறுவனங்களின் பரிந்துரைகளுடன் முரண்படுகின்ற சந்தர்ப்பங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| (இ) | 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குள் இலங்கை பொலீசுக்கு 50 பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 45 பரிந்துரைகளும் கல்வி அமைச்சிற்குரிய 90 பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 36 பரிந்துரைகளும் ஓய்வூதிய திணைக்களத்திற்கு உரிய 07 பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 06 பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்க வில்லை. இந்த பரிந்துரைகளை வழங்குவதற்கு 06 மாதங்களுக்கும் 06 வருடங்களுக்கும் இடையிலான காலம் செலவிடப்பட்டிருந்தது. | குறுகிய காலத்திற்குள் பரிந்துரைகளை வழங்குவதற்கும், அந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | அவதானிப்புக்கு இணங்குகின்றேன். |

## 3.3 வெளிநாட்டு உதவிகள் செயற்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| SWISS செயற்திட்டத்திற்குரிய முன்மொழிவுகளிலே குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட வேண்டிய "செயற்திட்ட உதவியாளர் (Project Assistant)" பதவிக்கான உத்தியோகத்தரொருவர் செயற்திட்ட கால வரையறை முடியும் வரைக்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்படாததன் காரணமாக இந்த செயற்திட்டத்தின் ஊடாக இடம்பெறுகின்ற இளைஞர் முகாமின் முழுமையான வேலைகளையும் ஆணைக்குழுவின் கல்வி மற்றும் விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்திட்ட உதவியாளர் (Project Assistant) பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட வேண்டும். | செயற்திட்டத்திற்கு உரிய ஒதுக்கீடுகள் கிடைப்பதற்கான தாமதத்தின் காரணமாக சம்பளம் செலுத்துவதில் சிக்கல்கள் ஏற்படுமென்பதால் ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை. |

## 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வதிவிட இளைஞர் முகாமிற்கான உணவு மற்றும் தங்குவதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் ஏனைய பெறுகைகள் நடவடிக்கைகளின் போது முறையான பெறுகைகள் நடைமுறையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகளுக்கு உரிய அனைத்து விடய்ஙகளும் கோவையினுள் உள்ளடக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்கு இணங்குகின்றேன். பெறுகைகள் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லையென்பதுடன் ஆணையாளர் சபைக்கு முன்வைத்த சபைத் தீர்மானத்தின் ஊடாக அனுமதி பெறப்பட்டதென்பதை அறியத் தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) கண்டி பிரதேச அலுவலகத்தின் ஊடாக இரும்பு அலுமாரிகளை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக் கோரலின் போது பிரதான அலுவலகத்தினால் பெற்றுக் கொடுக்கின்ற குறிப்புரைக்கு அமைய தகட்டின் தடிப்பு 0.6 ஆக இருக்க வேண்டுமெனினும் மதிப்பீட்டை மேற்கொள்ளும் போது தடிப்பு 0.4 ஐ உடைய தகடுகளினால் 3 office cubboard, மற்றும் 1, 4 Drawer cupboard உம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் தொழில்நுட்ப குறிப்புரைகளுக்கு இணங்க வேண்டும். | அவதானிப்புக்கு இணங்குகின்றேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவிற்கு இரண்டாவதாக குறைந்த விலையை சமர்ப்பித்த நிறுவனத்திடமிருந்து நிழற்பட பிரதி இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு முடியுமாயிருந்தும் இரண்டு வாரங்கள் பொருட்களை வழங்க தாமதமானதால் அந்த நிறுவனத்திடமிருந்து பொருட் கொள்வனவை நிராகரித்து மூன்றாவதாக குறைந்த விலையை சமர்ப்பித்த நிறுவனத்திடமிருந்து ரூபா 7,000 வீதம் மேலதிகமாக செலுத்தி 05 நிழற்பட பிரதி இயந்திரங்களை 2019 ஆம் ஆண்டிலே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதில் 2 இயந்திரங்கள் 2020 மே மாதம் வரைக்கும் 05 மாதங்களை விட அதிக காலமாக பாவனைக்கு உட்படுத்தியிருக்கவில்லை. | தேவைகளை சரியாக அடையாளங் கண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். | அந்த நிழற்பட பிரதி இயந்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய 4 ஆவது மாடி மற்றும் புத்தளம் அலுவலகம் என்பவற்றில் உள்ளக பிரச்சினைகள் சிலவற்றின் காரணமாக பகிர்ந்தளித்தல் தாமதமானது. |

| | | |
|---|---|---|
| (ஆ) ஆணைக்குழுவிற்கு சொந்தமான முச்சக்கர வண்டி 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | குறைப்பயன்பாட்டுச் சொத்துக்கள் சம்பந்தமாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் உபாயமார்க்கத் திட்டத்தில் அதிகாரச்சட்டத்தின் பலவீனங்கள் சுட்டிக் காட்டப்பட்டிருந்தும் 1996 ஆம் ஆண்டிலிருந்து அதிகாரச்சட்டத்தை மறுசீரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தை மறுசீரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனத்தின் 05 பணிப்பாளர் பதவிகள் அங்கீகாரத்துடன் காணப்பட்டாலும் அந்த 05 பதவிகளும் மற்றும் 03 உதவிப் பணிப்பாளர் பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டது. மேலும் 46 நிறைவேற்று அதிகார வகுப்புப் பதவிகள் அங்கீகாரத்துடன் காணப்பட்டாலும் இதில் 34 வெற்றிடமாக காணப்பட்டது. இப்படியாக நிறைவேற்று அதிகார வகுப்புப் பதவிகள் வெற்றிடமாக காணப்படுகின்ற காரணத்தினால் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு மற்றும் | தேவையான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | பதவியணியினரின் வெற்றிடங்கள் நிலவுவதற்கான பிரதான காரணம் ஆணைக்குழு காரணமாக ஆட்சேர்ப்பு முறைமை அங்கீகரிக்கப்படாமை பாதிப்புக்குள்ளாகியது. இறுதியாக ஆட்சேர்ப்பு முறைமை 2018 மே 17 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது. மேலும், ஊழியர் உள்ளடக்கத்திற்குரிய இறுதி அறிவுரை 2019 ஆகஸ்ட் மாதம் வரையிலும் பெறப்பட்டிருக்க |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாட்டு வியூகத்தை முறையாக மேற்கொள்வது பிரச்சினைக்குரியதாக உள்ளது அவதானிக்கப்பட்டது. | | வில்லை என்பதுடன் ஆட்சேர்ப்பு முறைமை பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது உள்ளது. |
| (ஆ) | ஆணைக்குழுவின் 47 மனித உரிமைகள் உத்தியோகத்தர் பதவிகளுக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருப்பினும் அந்த பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தேவையான பதவி வெற்றிடங்களும் நிரப்பப்பட வேண்டும். | அவதானிப்புக்கு இணங்குகின்றேன். |
| (இ) | பணிப்பாளர் பதவிக்காக ஏனைய தகைமைகளுடன் முகாமையாளர் தரத்தில் 15 வருடங்கள் சேவைக்கால அனுபவமுள்ள உத்தியோகத்தர் விண்ணப்பிக்காத காரணத்தினால் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாது இருந்தது. | ஆட்சேர்ப்பு முறைமையினுள் விண்ணப்பிக்க முடியுமான சேவைக்கால அனுபவமும் சேர்க்கப்பட வேண்டும். | 15 வருடங்கள் சேவைக்கால அனுபவமுள்ள உத்தியோகத்தர் விண்ணப்பிக்காத தனால் வெற்றிடங்களை நிரப்ப முடியாது உள்ளது. |